# ஜாமக்காரன்

# JAMAKKARAN

(**ஜாமக்காரனில்**) எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதை பிடித்துக்கொள்ளுங்கள் 1 தெச. 5:21
ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். ஆனாலும் அவன் மற்றொருவறாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி. 2:15


**VOLUME - 8 Reg No.TNBIL/2016/70171 ISSUE - 2**
**FEBRUARY 2024 TAMIL & MALAYALAM**
**ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=**



Mob.: No. **9894261333**
0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com



ஜாமக்காரன்
JAMAKKARAN




கர்த்தருக்குள் அன்பானவர்களே !

உங்களுக்கு சமாதானம் உண்டாவதாக.

இந்த மாதமும் ஜாமக்காரன் வெளியிட பண உதவி, ஜெப உதவி செய்தவர்களை வாழ்த்துறேன்.

Online, Cheque, M.O. வழியாக அனுப்பியவர்களின் காணிக்கை யாவும் நஷ்டமாகால் அத்தனையும் கிடைக்கப்பெற்றேன். அடுத்த மாதம் **மகாராஷ்ட்ரா** மாநிலத்தில் (ஆஞ்ஜி) வர்த்தா மாநிலத்தில் இயங்கி வரும் Rural Blessing Mission என்ற மிஷனரி ஸ்தாபனம் நடத்தும் ஊழியங்களில் பங்கொள்ள நீண்ட பயனம் மேற்கொள்கிறேன், விசுவாசகள் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

அதைத்தொடர்ந்து **இடையன்குடி** CSI சபையிலும், **ஆவடி தமிழ் லூத்தரன்** சபையிலும் கூட்டங்கள் வரிசையாக உண்டு. கர்த்தர் எனக்கு தொடர்ந்து ஆரோக்கியத்தையும், ஆயுளையும் கூட்டி கொடுத்து வருகிறார். என்னோடு கூட நீங்களும் தெய்வத்தை துதியுங்கள்.

தெய்வ கிருபை உங்கள் அனைவரோடும் இருப்பதாக. ஜெபிக்கிறேன்.

- **Dr. புஷ்பராஜ்**

# FEBRUARY - 2024

# அன்னிய பாஷை குழப்பம் 2

# ஜாமக்காரன் வெளியீடு



ஸ்தாபகர்-ஆசிரியர்

*வெளியிடுபவர்:*

**Dr. புஷ்பராஜ், சேலம்-5.**

கடந்த முறை நான் எழுதிய கட்டுரையின் கடைசி பக்கமாகிய 24ம் பக்கத்தில் எழுதியதை வாசகர்கள் ஞாபகப்படுத்திக்கொள்ள மறுபடியும் சில பத்திகளை இங்கு குறிப்பிடுகிறேன்.

## ஆவியானவரை கூப்பிடாதீர்கள்

**ஜெபத்தில் ஆவியானவரை ஒருபோதும் கூப்பிடாதீர்கள்.** அது தவறு!

யாரெல்லாம் **ஆவியானவரை அழைக்கிறார்களோ** அது பாஸ்டர் முதல் - சபை விசுவாசிகள், பிரபல ஊழியர்கள் வரை **அவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் எல்லாருக்குள்ளும் ஆவியானவர் இல்லை** என்று தான் அர்த்தம். அப்படியானால் அவர்கள் யாவரும் அதுவரை **அன்னிய பாஷையில்** பேசியது **மாய்மாலம்.** இப்போது நான் எழுதிய இந்த வார்த்தை கடினமான வார்த்தைதான்.

நான் கூறுவதை கோபப்படாமல் நன்றாக கவனியுங்கள்!

**ஆவியானவர்** யாருக்கு உண்டோ அவர்கள் **ஆவியானவரே வாரும்** என்று அழைக்கமாட்டார்கள். அதற்கு பதிலாய் **ஆவியானவரே நீர் வந்ததற்காக** ஸ்தோத்திரம். **என்னுள் இருப்பதற்காக ஸ்தோத்திரம்** என்ற வார்த்தைத்தான் அப்படிப்பட்டவர்கள் வாயிலிருந்து வரவேண்டும். **எங்களுக்குள்ளே வாசம் பண்ணும் ஆவியானவரே!** என்ற பாடல் மட்டுமே அர்த்தம் உள்ள பாடல் ஆகும்.

இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலர்களான 12 சீஷர்களும் இரத்த சாட்சியாக மரித்த காலத்திலிருந்து அதன்பின் உண்டான சபைகள் இரகசிய கிறிஸ்துவின் சபையாக இரகசியமாக கூடி ஆராதித்த அந்த நாட்கள் வரை **எந்த ஒரு சபையிலும்** யாரும் **அன்னிய பாஷை பேசவில்லை** என்று புதிய ஏற்பாட்டில் உள்ள எல்லா நிருபங்களிலிருந்தும் அறியமுடிகிறது. அதன்பின் கி.பி. 50க்கு பின் தீமோத்தேயுவுக்கு

எழுதப்பட்ட நிருபங்களையும் அதன்பின் எழுதப்பட்ட **சபை சரித்திரங்களையும்** வாசிக்கும்போது அன்றைய சபைகள் அன்னிய பாஷையில் பேசவில்லை என்று நான் எழுதியது உண்மை என்று அறியலாம்.

**புதிய ஏற்பாட்டு சபைகளில் அன்னிய பாஷை** பேசப்பட்டது எங்கு என்றால் சுமார் 16 பாஷைக்காரர்கள் கூடி ஆராதித்த **கொரிந்து சபையிலே** மட்டும்தான். அது அல்லாமல் வேறு எந்த சபை மக்களும் **அன்னிய பாஷை பேசவில்லை.** அன்னிய பாஷை பேசியதாக **புதிய ஏற்பட்டில் எந்த ஒரு நிருபங்களிலாவது,** சீஷர்கள் **அன்னிய பாஷை பேசியதாக** இதை வாசிக்கிற **உங்களில் யாராவது** வேதத்தில் எங்காவது சுட்டிக்காட்ட முடியுமா? **அன்னிய பாஷை பேசுவது** அத்தனை முக்கியமானால் **ஏன் ஒரு நிருபங்களிலும்** அதைப்பற்றி யாரும் குறிப்பிடவில்லை? யோசித்துப் பாருங்கள்!

**கான்ஸ்டன்டைன் ராஜா** காலத்துக்குமுன் **இருண்டகாலம்** என்று சரித்திரம் கூறுகிறது. **அது கிறிஸ்தவர்கள் யாரும் வெளியரங்கமாக ஆராதிக்க முடியாத காலமாயிருந்தது.** அந்த கால கட்டத்தில் கிறிஸ்தவர்கள் **குகைகளிலும்,** கல்லறைகளிலும், **காடுகளிலும்** மறைவான முறையில் தீபந்தங்களை எறியவைத்து இரவு நேரங்களில், பயந்து பயந்து ஆராதனை நடத்திவந்தார்கள்.

**கான்ஸ்டன்டைன் ராஜா** இயேசுவை ஏற்றுக்கொண்டபின் கிறிஸ்தவர்களுக்கு பொற்காலம் உண்டானது என்று கூறப்படுகிறது. அதன்பின்தான் கிறிஸ்தவர்கள் **சுதந்திரமாக** ஆராதித்தார்கள். சுதந்திரமாக ஆராதித்த அந்த காலங்களிலும் கூட **கிறிஸ்தவ சபைகளில்** எங்கும் **அன்னிய பாஷை** பேசப்படவில்லை என்பதை **சபை சரித்திரம்** கூறுகிறது.

**இந்த ஜாமக்காரனை வாசிப்பவர்கள் முக்கியமாக கவனிக்க வேண்டியது.**

☐ வேதத்தை **மொழிபெயர்த்தவர்கள்** ஒருவர் கூட அன்னிய பாஷை பேசவில்லை.

☐ **இரத்த சாட்சியாய்** கிறிஸ்துவுக்காய் மரித்த ஒருவராவது **அன்னிய** பாஷையை பேசவில்லை.

☐ பல தேசங்களிலிருந்து **சுவிசேஷம்** அறிவிக்க வந்த **மிஷனரிமார்கள்** ஒருவராகிலும் **அன்னிய பாஷை** பேசவில்லை என்பதையும் இதை வாசிப்பவர்கள் கவனிப்பது மிக முக்கியம்.

☐ **சீகன்ஸ்பால்க் :** வேதத்தை **தமிழில்** முதன்முதல் மொழிபெயர்த்த சீகன்ஸ்பால்க் அவர்கள் பிராமணர்களிடம் கஷ்டப்பட்டு **தமிழ் எழுத கற்றுக்கொண்டாரேயன்றி அன்னிய பாஷை** பேசவில்லை. அந்த காலத்தில் அவரால் எழுதப்பட்ட பல கடித குறிப்புகளில் எங்கும் **அன்னிய பாஷையைப்பற்றி** அவர் குறிப்பிடவில்லை.

☐ **வில்லியம்கேரி** அவர்கள் பல பாஷைகளில் வேதத்தை மொழி பெயர்த்தாரேயன்றி ஒரு இடத்திலாவது எங்காவது அவர் **அன்னிய பாஷை** பேசியதாக சரித்திரங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறதா? இல்லையே !

☐ Rev. குண்டர்க் (Rev. Gundurk) அவர்கள் மலபார் பகுதிகளில் வாழ்ந்தபோதுதான் முதல் வேத புத்தகம் **மலையாள பாஷையில்** மொழிபெயர்க்கப்பட்டது. அவராவது **அன்னிய பாஷையில்** பேசினார் என்று **வேத சரித்திரங்களில்** வாசிக்கிறோமா? இல்லையே !

## மிஷனரிகளின் வரவு

இந்தியாவின் வட கிழக்கு பாகங்களில் சுவிசேஷம் அறிவிக்க வந்த மிஷனரிகள்முதல் **கன்னியாகுமரி** மிஷனரியான **ரிங்கல்தொபே** வரை ஒரு மிஷனரியாவது **அன்னிய பாஷை** பேசினார்களா? இல்லையே !.

இவர்கள் எல்லாரும் வேத புஸ்தகத்தை **ஆராய்ந்தவர்கள்.** இவர்களில் ஒருவராவது **அன்னிய பாஷை** பேசினார்கள் என்று யாராவது கூற முடியுமா?

## பெந்தேகோஸ்தே சபையினர் மட்டும் எப்படி பேசினார்கள்?

1901ம் வருடம் அமெரிக்காவில் முழு இரவு ஜெபத்தில் ஒரு வாலிப பெண்ணின் **உளரல் சத்தம்** ஜெப வேளையில் தனியாக கேட்டது. அதை கேட்டவர்கள் ஒரு வேளை இதுதான் ஆதி அப்போஸ்தலர்கள் பேசிய **அன்னிய பாஷையாக** இருக்குமோ எனறு ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டார்கள்.

ஜெபத்தில் பாடல்பாடும்போதும் ஜெபிக்கும்போதும் **உணர்ச்சி வசப்படும்போது** வாய் குளருமே அப்படிதான் அன்று **அந்த பெண்** பேசியிருக்கிறாள். அதை அவர்கள் **அன்னிய பாஷை** என்றார்கள்.

அந்த காலத்தில் ஜான் வெஸ்லி ஆரம்பித்த (மெதடிஸ்ட்) சபை, பிரஸ்பிட்டேரியன் சபை, ஆங்கிலிக்கன் சபை, பேப்டிஸ்ட் சபை போன்ற ஏராளமான சபைகளில் **மனம் திரும்பின அனுபவம்** உள்ளவர்கள் மிக அதிகமாக இருந்தார்கள். **மனம்திரும்புதல்தான்** சபைக்கு அடிதள உபதேசமாகும்.

இந்த சூழ்நிலையில் **அமெரிக்காவில்** இந்த குறிப்பிட்ட வாலிப பெண் உணர்ச்சிவசப்பட்டு **உளரிய உளரலை** அன்னிய பாஷை என்று அழைக்கப்பட்டதால் அந்த குறிப்பிட்ட சபை, மற்ற சபைகளிலிருந்து தங்களை மட்டும் **வேறுபடுத்தி** காண்பிக்க இந்த **உளரல்** மிகவும் உதவியாக இருப்பதாக மிக தவறாக தீர்மானித்துவிட்டார்கள். அதே அமெரிக்காவில் அதே கூட்டத்தில் மேலும் பலர் அந்த பெண் உளருவதைப்போல **உளரிப்பார்த்தார்கள்.** அது அவர்களை **சரீர பிரகாரமாக** உற்சாகப்படுத்தின(பரவசப்படுத்தின). உடனே ஒரு கூட்ட வாலிபர்கள் அவர்களும் மற்றவர்களை பின்பற்றி **உளரி பரவசப்பட** ஆரம்பித்தார்கள்.

இந்த விவரம் காட்டு தீ போல அமெரிக்காவின் பல்வேறு மாநிலங்களுக்கு பரவி, உடனே அவர்களும் **அதை பயிற்சித்து அன்னிய பாஷை என்ற பெயரில் உளர ஆரம்பித்துவிட்டனர்.** பாட்டும் ஸ்தோத்திர சப்தமும் வாத்திய கருவிகளின் பெரிய வேகமான சப்தமும் அவர்களை மிகவும் பரவசப்படுத்தின. பாடினார்கள், ஆடினார்கள் கைகளை தட்டி அல்லேலூயா கூறி ஆர்பரித்தார்கள். இது உலகெங்கும் தீயாய் பரவின. அதன்பின் உலகில் பல்வேறு நாடுகளில் இதையே **உபதேசமாக மாற்றி** மற்ற எல்லா சபைகளிலிருந்தும் **தங்களை தனித்து வேறுபடுத்திகாட்ட** இது வசதியாகிபோனதால் **அன்னிய பாஷை** என்ற பெயரில் **உளரும்** கூட்டம் எல்லாம் **பெந்தேகோஸ்தே சபையாக** மாறியது.

**பெந்தேகோஸ்தே** என்ற இந்த பெயரை இவர்கள் தங்கள் சபைக்கு வைக்க காரணம், அப்போஸ்தலர் 2ம் அதிகாரத்தில் ஆதி அப்போஸ்தலர் **பஸ்கா** பண்டிகையின் 50**வது நாள்** அன்று மேல்அறையில் கூடி நின்றபோது **பரிசுத்தாவியானவரால் பற்பல பாஷைகள்** அவர்களின் ஒரே வாயிலிருந்து வெளி வந்தது. அதையே இவர்கள் தங்கள் சபைக்கு **தனித்த**

**அடையாளமாக்கி பஸ்கா** பண்டிகையின் **50வது நாளின்** பெயரான **பெந்தேகோஸ்தே** என்ற பெயரையே **தங்கள் சபைகளின் பெயராக** மாற்றி தங்கள் சபையை **பெந்தேகோஸ்தே சபை** என கூறிக்கொண்டனர். அந்த **உளரல்** அவர்கள் **சரீரத்தைத்தான் பரவசப்படுத்தியதே** தவிர, ஆத்துமாவை அல்ல !

## சபையின் பிரசங்க மொழிபெயர்ப்புக்கு வேறு ஆளை ஏன் நியமித்தார்கள்?

பெந்தேகோஸ்தே சபைகளில் விசேஷ கன்வென்ஷன் கூட்டங்கள் நடக்கும்போது **இந்தி** மொழி, **தெலுங்கு,** கன்னடா, **ஆங்கிலம்** போன்ற பாஷைகள் **பேசும் பிரசங்கிமார்** வரும்போது, **ஆவியில் நிறைகிறோம், அன்னிய பாஷை பேசுகிறோம்** என்றெல்லாம் கூறி பெருமையடித்துக்கொள்ளும் இவர்களில் யாராவது அந்த **அன்னிய பாஷையில் பிரசங்கிக்கும் அவர் பிரசங்கத்தை மொழி பெயர்க்க** முன் வருவதில்லையே ஏன்? அவ்வளவு ஏன்? **ஆவியில் நிறைத்த அந்த சபையின் பாஸ்டரையே** மொழிபெயர்க்க பேசவைக்கலாமே!.. ஏன் இவர்களால் மொழிபெயர்க்க முடிவதில்லை? இதை குறித்தும் இந்த கேள்வியையும் அவர்களிடம் யாராவது கேட்டுப் பாருங்களேன். அதற்கு அவர்கள் நிச்சயம் பதில் கூற முடியாது! அந்த குறிப்பிட்ட சபை பாஸ்டர்கள் **சமாளிப்பார்களே** தவிர, அவர்களால் பதில் கூற முடியாது !

ஆகவே இப்போதுள்ள பெந்தேகோஸ்தே சபையினர் எல்லாரும் **பாஸ்டர் உட்பட** தாங்கள் அன்னிய பாஷையில் பேசுவது பரிசுத்த ஆவியானவரின் கிரியையால்தான் **அன்னிய பாஷை** பேசுகிறோம் என்று கூறினால் அது **மாய்மாலம்** அல்லது **பொய்** என்பது தெளிவாக விளங்குகிறதல்லவா?.

☐ **எபேசு சபை** விசுவாசிகளுக்கு பவுல் எழும்போது நீங்கள் வசனம் கேட்டு இரட்சிக்கப்பட்டு விசுவாசிகளானபோது வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட **பரிசுத்த ஆவியானவரால்** அவருக்குள் முத்திரை போடப்பட்டீர்கள் என்று உறுதிபடுத்துகிறார். (எபே. 1:13) அதை மறுபடியும் பவுல் அவர்களிடம் உறுதிபடுத்த காரணம் **ஆவியானவர் அவர்களுக்குள் வந்ததே** அவர்கள் அறியவில்லை. ஒருவேளை **வெளி அடையாளம்** இருந்திருக்குமானால் **சபை மக்கள்** அதை அறிந்திருப்பார்களே! பவுல் கூறியதற்கு பிறகுதான் **எபேசு சபை** மக்கள் ஆவியானவர் தங்களுக்குள்ளே வந்துவிட்டார் என்று அறிந்து கொள்கிறார்கள்.

**உங்களுக்குள் இருக்கும் ஆவியானவரை நீங்களே அறிவீர்களே! என்று பவுல் கூறுகிறார்.** 1 யோ. 2:27ல் அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது. (அதைக்குறித்து) ஒருவரும் உங்களுக்கு போதிக்க வேண்டியதில்லையே என்று எழுதியிருக்கிறது.

☐ **பரிசுத்த ஆவியானவரின் நிறைவுக்கு வெளி அடையாளம் அன்னிய பாஷை** என்று வேதத்தில் எங்கும் கூறப்படவில்லை.

☐ **பரிசுத்த ஆவியானவரின்** அடையாளத்தை **அன்னிய பாஷையில்** பார்க்கமுடியாது. ஆவியின் கனி (சுபாவம்) **சகல நற்குணத்திலும்,** நீதியிலும், உண்மையிலும் விளங்கும். **ஆவியின் (அடையாளம் கனியோ** (சுபாவமோ) அன்பு, சந்தோஷம் சமாதானம், நீடிய பொருமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் ஆகியவைகள்தான்) **உண்மையான அடையாளம் ஆகும். பரிசுத்த ஆவியானவர்** மனிதனுக்குள் வந்தால் மேலே எழுதப்பட்ட சுபாவங்கள் **அடையாளமாக** காணப்படும். கலா. 5:22

**எபேசு** பட்டண விசுவாசிகளுக்காக **ஜெபித்தபோதும்,** கொரிநெல்லியோஸ் குடும்பத்தினர் இவர்கள் யாவரும் (யூதன் அல்லாத **அன்னிய ஜாதிகாரர்கள்**) வீட்டில் சென்று **ஜெபித்தபோதும்** அவர்கள் **அன்னிய பாஷையில் தீர்க்கதரிசனம் கூறினார்கள் என்று எழுதப்பட்டுள்ளது.** (தீர்க்கதரிசனம் என்றால் **கர்த்தரின் வார்த்தை** என்று அர்த்தமாகும்.) (அப் 10) இங்கு பேசப்பட்ட **அன்னிய பாஷை** கைகளை வைத்து ஜெபித்த **யூதனாகிய பேதுருவுக்கும்** மற்ற யூதாசின் **சீஷர்களுக்கும் மாத்திரம் அடையாளமாக** கொடுக்கப்பட்டது ஆகும். காரணம், பரிசுத்த ஆவியானவர் **யூதர்களுக்கு** மட்டும்தான் என்றும் **புற ஜாதிகளுக்கு** பரிசுத்தாவியானவர் கிடையாது என்ற **தவறான அபிப்ராயம்** இவர்கள் கொண்டிருந்தார்கள். ஆகவே பேதுருவுக்கும், மற்ற யூத இன சீஷர்களுக்கும் மனம்திரும்பின அனுபவம் உள்ள உலகத்தில் உள்ள எல்லா இன மக்களுக்கும் யூதருக்கும் புற ஜாதி மக்களுக்கும் பரிசுத்த ஆவியானவரின் நிறைவு உண்டு என்பதை விளங்கவைக்கவே **இந்த இரண்டு இடங்களில் மட்டும்** ஆவியானவர் இந்த அடையாள ஏற்பாட்டை செய்தார்.

இவர்கள் பேசியதில் **தீர்க்கதரிசனம்** கூறப்பட்டது. தீர்க்கதரிசனம் என்றால் கர்த்தரின் வார்த்தை அது அர்த்தமில்லாதததல்ல. இந்த இரண்டு இடத்தில் பேசப்பட்ட **பரவச பேச்சுக்களை** வைத்து இந்த அடையாளம் **பரிசுத்தாவி பெற்ற சபையிலுள்ள அனைவருக்கும்** கிடைக்க வேண்டும் என்று கூறுவது முட்டாள்தனம் ஆகும். காரணம் நம் கர்த்தருக்கு உலகில் அனைத்து மனுஷரால் பேசப்படும் **சகல பாஷைகளும்** தெரியுமே! அப்படியிருக்க நம் **தாய்பாஷையிலேயே** எளிதாக கர்த்தரிடம் நாம் பேசலாமே.! ஆனால் **பெந்தேகோஸ்தே சபையினரோ** கக்ரே.. புக்கரே.. லாவோ பலரிப்பா.. ரிக்கல் ரிப்பல் . சங்பர பலபல என்று அன்னிய பாஷை என்ற பெயரில் **பேசி உளருகிறார்கள்** எவ்வளவு அறியாமை இது.! கர்த்தருக்குத்தான் உலகின் சகல மொழிகளும் தெரியுமே! பின் ஏன் உளரும் வார்த்தை பேச வேண்டும்.

## கர்த்தர் மனிதனோடு பேச விரும்புகிறார்.

பழைய ஏற்பாட்டின் காலத்தில் கர்த்தர் எல்லா மனிதர்களோடும் பேசாமல் **ஊழியக்காரர்** மூலமாகவும், **தீர்க்கதரிசிகள்** மூலமாகவுமே மக்களிடமே பேசினார் .

அப்படி பேசும்போது **மனிதர்** என்ன பாஷையில் (மொழியில்) பேசுகிறார்களோ அந்த மொழியில்தான் கர்த்தரும் **மக்களோடு பேசுவார்.** நமக்கும் புரியாமல், மற்றவர்களுக்கும் புரியாமல், **குழப்புகிற ஆவியானவர்** அல்ல.!

பவுல் தன் **சாட்சியை** கூறும்போது கர்த்தர் முதன்முறை தன்னோடு பேசின சம்பவத்தை விளக்கும்போது **நான் தரையில்** விழுந்தபோது.. முள்ளில் உதைக்கிறது உனக்கு கடினமாம்மென்று **எபிரேய பாஷையில் என்னுடனே சொல்லுகிற ஒரு சத்தத்தை கேட்டேன்** என்றார். நாம் என்ன பாஷையில் பேசுகிறோமோ அந்த பாஷையில்தான் கர்த்தர் நம்மோடும் பேச ஆசைப்படுகிறார். அப்படியிருக்க நீ கர்த்தரிடம் பேசுகிறேன் என்று உன் இஷ்டத்துக்கு உளரினால் கர்த்தருக்கும் விளங்காது உனக்கும் பிரயோஜனமில்லை.

## கழுதை பேசிய பாஷை

எண்ணாகமம் 22:26 **தீர்க்கதரிசி** ஒருவன் தேவனுக்கு பிரியமில்லாத வழியில் கழுதையின்மேல் ஏறி செல்லும்போது கர்த்தர் அவனை எச்சரிக்கை கொடுக்கும்வண்ணமாக **கழுதை மூலமாக அந்த தீர்க்கதரிசியோடு கர்த்தர் பேசினார்.** வசனம் இப்படி சொல்கிறது!



கர்த்தர் **கழுதையின் வாயை திறந்தார்.** தன்மேல் அமர்ந்திருக்கும் **பிலேயாமோடு** கர்த்தர் கழுதையோடு கூற சொன்னதை அப்படியே எபிரேய பாஷையில் பேசியது.

**மிருகங்கள்** எப்போதும் தங்கள் இனத்தோடு பேசும் **மிருக பாஷை** ஒன்று உண்டு. ஆனால் இங்கு **கழுதை** தன் **கழுதையின் பாஷையில்** மனிதனிடம் பேசாமல் **மனிதன் பேசும் எபிரேய பாஷையில்** தெளிவாக பேசி தீர்க்கதரிசியை கழுதை எச்சரித்தது.

ஒரு **கழுதை** மனிதனோடு, **மனிதனுக்கு** விளங்கும், **மனித பாஷையில்** பேசும்போது **பெந்தேகோஸ்தே** சபை மக்கள், **பாஸ்டர்கள்** நாங்கள் கர்த்தரிடம் பேசுகிறோம் என்று **பொய்** கூறி **ஜெபத்தில் அன்னிய பாஷை** என்ற பெயரில் **உளரி பேசுவது** பேசுகிற அவர்களுக்கும் **விளங்காமல்** கர்த்தருக்கும் விளங்காமல் நாங்கள் **கர்த்தரிடம் பேசுகிறோம்** என்று **கக்ர-பிக்கரே-க்ரபலா. சுக்கரபலா, சங்கரபாலா** என்று **சொன்னதையே திரும்ப திரும்ப பேசுகிறார்கள்.** அவர்களுடைய மனசாட்சிக்கே இது நன்றாக தெரியும் **தாங்கள் பேசுவது பாஷையே அல்ல** என்பதும் தாங்கள் **மக்களை ஏமாற்றுகிறோம்** என்பதும் நிச்சயம் இவர்கள் அறிவார்கள். யாரோடு **என்ன பாஷையில்** பேசவேண்டும என்று அந்த **5 அறிவுள்ள** மிருகமான **கழுதைக்கு** உள்ள ஞானம்கூட **6 அறிவு** பெற்ற பெந்தேகோஸ்தே **சபையாருக்கும், பாஸ்டருக்கும்** இல்லாமல் போனதுதான் மன வேதனையாக இருக்கிறது.

அப்போஸ்தலர் 2ம் அதிகாரத்தில் மேல் அறையில் நின்று கொண்டிருந்த 125 பேரும் தங்கள் **வாயை மட்டும்** திறந்தார்கள். அந்த வாய் வழியே **ஆவியானவர் பேசினார்.** ஒரு பாஷை அல்ல **ஒரே** வாயில் **பல பாஷைகள் சரளமாக வருகிறது.** அதில் கவனிக்கவேண்டியது. அங்கு கூட்டமாய் நின்று கொண்டிருந்த **அத்தனை பாஷைக்காரருக்கும் இவர்கள் பேசிய மொழி விளங்கியது. அதை கேட்டு அவர்களே ஆச்சரியப்பட்டு இவர்கள் கலிலேயரல்லவா? நம்முடைய பாஷை** இவர்களுக்கு எப்படி தெரிந்தது? என்று கூறி **ஆச்சரியப்பட்டார்கள்** என்று வேதம் கூறுகிறது.

அதே முறையில்தான் கழுதையையும் கர்த்தர் **வாய் திறக்கவைத்து மனிதன் பேசும்** எபிரேய பாஷையில் **தீர்க்கதரிசிக்கே** செய்தி கூற வைத்ததை வாசிக்கிறவர்கள். கொஞ்ஜம் சிந்தியுங்கள் !

நம் கர்த்தருக்கு உலக மக்கள் பேசும் **விதவிதமான பாஷைகள் யாவும்** அவருக்கு தெரியும் **பாஷையே அல்லாத** ஒரு **உளரல் சத்தத்தில்** கர்த்தர் நம்மை பேச வைப்பாரா? யோசியுங்கள்

## நீங்கள் பேசும் பாஷை உண்மையா? - பொய்யா?
## என்று அறிய ஒரு பரிசோதனை

ஏற்கனவே ஜாமக்காரனில் நான் எழுதி அறிவித்த பரிசோதனையை குறித்த ஆலோசனையால் **பரிசோதனை செய்து தெளிவுபெற்று** தாங்கள் பேசி கொண்டிருந்த **அன்னிய பாஷையை** நிறுத்திக்கொண்ட **பெந்தேகோஸ்தே** சபை பாஸ்டர்கள், **விசுவாசிகள்** ஏராளம். நான் **ஜாமக்காரனில் எழுதியது வீண்** என்று நினைத்து கவலைப்பட்ட எனக்கு இவர்கள் எழுதிய கடிதங்கள் கர்த்தரை துதிக்க செய்தது.

**ஒரு சின்ன பரிசோதனை :-** நான் எழுதுவது உண்மையா?, பொய்யா? என்று நீங்கள் அறிந்துக்கொள்ள இது நல்ல வாய்ப்பு.

☐ **வெளிநாட்டு பெந்தேகோஸ்தே சபை பாஸ்டர்கள் பேசும் அன்னிய பாஷை**

**தமிழ்நாட்டு பெந்தேகோஸ்தே சபை பாஸ்டர்களின் அன்னிய பாஷை** ஆகிய பல்வேறு நாடுகளில் பேசிய அன்னிய பாஷைகளையும், குறிப்பாக தமிழ்நாடு, கேரளா மாநிலங்களில் பேசப்பட்ட அன்னிய பாஷைகளையும் **பதிவு செய்து** அவைகளை **மொழி ஆராய்ச்சி** செய்யும் படிப்பு படித்த பட்டதாரிகள் (Linguistic) படித்தவர்களிடம் கொடுத்து அவர்கள் ஆராய்ந்து அளித்த தகவலை, நானே நேரில் கேட்டு அறிந்து பயபக்தியோடு அவைகளை **பரிசோதனை** செய்து அறிந்து அதன்பின்தான் இதை எழுதுகிறேன்.

முதலாவது இவர்கள் எல்லாரும் பேசும் **அன்னிய பாஷையில் ஒரு குறிப்பிட்ட வார்த்தைகளையே** இவர்கள் திரும்ப திரும்ப பேசுவதை அறியலாம். அதன்பின் தொடர்ந்து அவர்கள் பேசும் அன்னிய பாஷையில் **புதிய வார்த்தைகள்** எதுவும் வராது.

நீங்கள் உங்கள் டேப் ரிக்கார்டில் அல்லது (மொபைலில்) நீங்கள் அன்னிய பாஷையை பதிவு செய்யுங்கள். அதன்பின் ஜெபத்தோடு நீங்கள் பேசிய பாஷையை திரும்ப திரும்ப கேட்டுப்பாருங்கள். அப்போது ஆவியானவரே நீங்கள் விளங்கிக்கொள்ள உங்களுக்கு நிச்சயம் உதவுவார்.

## ஒரு பெந்தேகோஸ்தே சபை பாஸ்டர் தெளிவு பெற்றது

இதைக்குறித்து ஒரு பாஸ்டர் எனக்கு எழுதியபோது தான்பேசிய அன்னிய பாஷையை பதிவு செய்து கேட்டபோது வெட்கப்பட்டு கண்ணீர்விட்டேன் என்றார். மேலும் அவர் எழுதியதாவது அப்படியானால் ஆவியானவரே இத்தனை காலம் நீர் என்னோடு இல்லையா? நான் அன்னிய பாஷை பேசியபோது மிகவும் ஆறுதலும், பெலமும் பெற்றேனே! அது எப்படி? நான் நன்றாக துதித்தேனே! என் துதியின் சத்தம் என் சபை மக்களையும் சத்தம் போட்டு ஸ்தோத்திரம் செய்ய வைத்ததே! அதை தொடர்ந்து கொஞ்ஜ நேரத்தில் எல்லாரும் அன்னிய பாஷை பேச நானும் பேசினேனே! அது எல்லாம் மாயையா? ஆவியானவர் என்னை பையித்தியகாரன் ஆக்கிவிட்டாரா?. இந்த குழப்பம் அந்த பாஸ்டருக்கு உண்டான உடனே சபை ஆராதனையை உதவி பாஸ்டரிடம் ஒப்புவித்து என்னை காண அவர் சேலம் வரவில்லை. நான் விருதுநகர் அருகே CSI சபையில் என் கூட்டம் நடந்துக்கொண்டிருந்தது. அங்கு சனிக்கிழமை காலை கவுன்சிலில் நேரம் ஏற்பாடு செய்திருந்தனர். வியாதியஸ்தர்களை அழைத்து வந்து ஜெபிக்கவும் மக்களின் பல தேவைகளுக்காக ஜெபிக்கவும் நூற்றுக்கணக்கில் ஆட்கள் வரிசையாக உட்கார வைத்திருந்தார்கள்.

வரிசையில் வந்த இந்த பாஸ்டரும் என் அறைக்குள் வந்தார். இவர் விஷயத்தை நான் கேட்டவுடன் பாஸ்டர் இப்போது நாம் இதைக்குறித்து பேசவேண்டாம். உங்களுக்கு விளக்கம் கொடுக்க நீண்டநேரம் ஆகும். ஆட்சேபனையில்லையானால் வெளியில் காத்திருக்கும் மற்றவர்களுக்கு நான் ஜெபித்தபின் கடைசியாக உங்களோடு பேசுகிறேன் என்றேன்.

அவரும் எனக்கு அவசரமில்லை நான் வெளி ஊரிலிருந்து வந்திருக்கிறேன். எப்போது வேண்டுமானால் போக எனக்கு வசதி உண்டு. நான் சாப்பிட்ட பிறகு வருகிறேன் என்று கூறி

சென்றுவிட்டார். கடைசியாக எல்லாரும் சென்றபின் பாஸ்டர் மிகவும் சோக முகத்துடன் அறைக்குள் வந்தார். மனதின் உள்ளே போராட்டம், குழப்பம் நிறைந்து காணப்பட்டது. என்னிடம் முழு விவரங்களையும் கூறி என்னிடம் அவரின் சின்ன டேப் ரிக்கார்டை காண்பித்தார். இதைத்தான் நான் என் மனைவியிடம் கொடுத்து நான் வீட்டில் ஜெபிக்கும்போதும் சபையில் துதி ஆராதனையில் ஜெபிக்கும்போதும் எங்கள் குடும்ப ஜெபத்தில் ஜெபிக்கும்போதும் டேப் ரிக்கார்டரை ஆன் செய்து வைப்பேன்.

அப்படி ஒரு வாரம் தொடர்ந்து நான் ஜெபிக்கும்போதும் என் மனைவி ஜெபிக்கும்போதும் சபை மக்களோடு ஜெபம் செய்யும்போதும் ஜெபத்தில் பேசிய அனைத்து **அன்னிய பாஷைகளும்** பதிவு செய்யப்பட்டது. அதன்பின் நானும்,மனைவியும் ஒரு நாள் முழுவதும் இதற்காகவே உபவாசம் செய்து ஜெபித்தபின் நாங்கள் ஒரு வாரம் ஜெபத்தில் பேசிய அன்னிய பாஷைகளை கேட்டோம். திரும்ப திரும்ப கேட்டோம். ரீவைண்ட் செய்து கேட்டோம். எங்கள் மனம் மிகவும் துவண்டு போனது. நான் ஏமாற்றப்பட்டேனோ? அல்லது 10 வருடத்துக்கு முன் எனக்கு ஊழியத்தை கற்றுக்கொடுத்து என்னையும் பாஸ்டராக்கின என் குருவான என் தலைமை பாஸ்டர் அவர்கள்தான் எனக்கு **பரிசுத்தாவியானவரைப்**பற்றியும் **அக்கினி அபிஷேகத்தைப்பற்றியும், அன்னிய பாஷை** பற்றியும் சொல்லிக்கொடுத்தவராவார்.

அப்படியானால் அவர் பேசியதும், அவர் எனக்கு சொல்லிக்கொடுத்ததுமான **அன்னிய பாஷை** வரம் தவறானதா? அந்த **அன்னிய பாஷையை** நான் பேச துடங்கியபின்தான் பைபிள் பற்றி அறிந்தேன். பிரசங்கம் செய்ய கற்றுக்கொண்டேன். இப்போது ஆங்கிலத்திலும் நான் பேசுகிறேன். இது அன்னிய பாஷையின் பக்தி விருத்தியில்லையா? 1 கொரி 14:4ல் அன்னிய பாஷையில் பேசுகிறவன் தனக்கே **பக்தி விருத்தி** உண்டாக பேசுகிறான் என்று எழுதியிருக்கிறதே,. அதனால் அல்லவா பேச கூச்சப்படும் என்னைக்கூட நன்றாக பிரசங்கம் செய்ய ஆவியானவர் அருள் புரிந்துள்ளார். குறைந்த படிப்புள்ள எனக்கு வேதத்தை விளக்கி சொல்லும் ஞானத்தை ஆவியானவர் கொடுத்திருக்கிறார். இதெல்லாம் எப்படி எனக்கு கிடைத்தது. ஆவியானவர் அபிஷகம் இல்லாமல் கிடைக்குமா? அன்னிய பாஷை பேச பேச ஞானம் பெருகிகொண்டே போனதை நான் அறிவேன் என்றார்.

உடனே நான் இன்னும் நீங்கள் கூற வேண்டியது வேறு ஏதும் உண்டா? என்று கேட்டேன். இல்லை இல்லை நீங்கள் பேசுங்கள் என்றார்.

உடனே நான் அவரை நோக்கி பாஸ்டர் உங்கள் நிலை பரிதாபமாக இருக்கிறது. சோர்ந்து போகாதீர்கள். உங்கள் மீது எந்த தவறும் இல்லை. உங்கள் ஊழியத்திலும் தவறு இல்லை. ஆவியானவர் **உங்களுக்குள்** இருக்கிறார் என்பது உண்மை. இப்படி நான் சொன்னதும் அவர் முகத்தில் எத்தனை மகிழ்ச்சி. ஒரு வினாடியில் முகத்தில் ஒரு களை உண்டானது. நீங்கள் சொல்வது உண்மையா? ஆவியானவர் எனக்குள் இருக்கிறாரா அப்போ நான் பேசிய **அன்னிய பாஷை** சரிதானே என்று படபடவென்று உணர்ச்சி வசப்பட்டு பேசினார்.

நான் சொன்னேன், பாஸ்டர் உங்களில் பரிசுத்த ஆவியானவர் உண்டு என்று நான் கூறியது உண்மைதான். ஆவியானவர் இரட்சிக்கப்பட்ட உங்களில் இல்லாமல்போனால் இந்த குற்ற உணர்வு நிச்சயம் உங்களுக்குள் உண்டாகியிருக்காது. நீங்கள் பேசிய அன்னிய பாஷை சரியானதா என்ற கேள்வியும் எழுந்திருக்காது. அதை அறிந்துக்கொள்ளும் ஆவலும் உங்களுக்குள் உண்டாகியிருக்காது.

இப்படி நான் கூறியவுடன் அவர் முகத்தில் பெரிய சந்தோஷம். முகத்தில் சோக களை நீங்கி பிரகாசமாக காணப்பட்டது.

இப்படிக் கூறிய உடன் அந்த பாஸ்டர் இனி நான் என்ன செய்வது எனக்குண்டான தெளிவு குறித்து சபை மக்களிடம் நான் கூறிவிடட்டுமா? என்றார். உடனே நான் அவசரப்படவேண்டாம். அன்னிய பாஷை என்ற மாயையில் உங்கள் சபை பல வருடங்களாக ஊறிப்போனது. அவர்களை உங்களால் மாற்ற முடியாது. அவசரப்பட்டு சபை மக்களை நீங்கள் உங்கள் புதிய அனுபவத்திற்கு மாற்ற முயன்றால் அவர்கள் உங்களை வெளியேற்றிவிடுவார்கள் அல்லது உங்களுக்கு இருந்த ஆவி போய்விட்டது என்று ஆவியை தேடி மற்ற சபைகளில் போய் சேர்ந்துவிடுவார்கள். அதனால் முதலில் கர்த்தரிடம் சென்று நீங்களும் உங்கள் மனைவியும் அழுது ஜெபியுங்கள்.

கர்த்தாவே நாங்கள் இக்கட்டான நிலையில் இருக்கிறோம். நாங்கள் கட்டி காத்த சபை எங்கள் கைவிட்டு போய்விடும் நிலையில் டாக்டரின் ஆலோசனை எங்களை குழப்பிவிட்டது. சரியான வசனத்தில் இனி சபையை நடத்த எனக்கு நல்ல ஆலோசனை தாரும் என்று கேளுங்கள். உங்களை குழப்பியது நான் அல்ல. கர்த்தரே காரணம். உங்களை நேசிக்கிறபடியால் கர்த்தர் உங்களை என்னிடத்தில் அனுப்பினார். குழப்பம் எப்போதும் தெளிவை உண்டாக்கும்.

முதலாவது சபை ஆராதனையில் நீங்கள் அன்னிய பாஷையில் பேசுவதை நிறுத்துங்கள். துதி ஆராதனையை உதவி பாஸ்டரை கொஞ்ஜ நாட்கள் நடத்த சொல்லுங்கள். உங்களை சபை மக்கள் கவனிப்பார்கள். நீங்கள் முன்புபோல் அன்னிய பாஷையில் அக்கறை எடுக்காதததை நிச்சயம் ஒரு சிலரிடமாவது கேள்வி எழும். அப்படி எழுந்தால் நல்லது. அவர் உங்களிடம் அன்னிய பாஷையில் சில வாரங்களாக நீங்கள் அக்கறை செலுத்தாததை கேட்டால் மட்டும் அந்த நபரை வீட்டுக்கு வரவழைத்து நடந்ததை கூறாமல் குறிப்பாக டேப் ரிக்கார்ட் பரிசோதனையை கூறாமல் அவர் அன்னிய பாஷை அனுபவத்தை கேளுங்கள். அதன்பின் வசனங்களை காட்டி அவரையே வேதத்தையும் தன் அனுபவத்தையும் ஆராய்ந்து பார்க்க சொல்லுங்கள். நிச்சயம் பலன் உண்டாகும். ஆனால் இது உடனே நடக்கும் மாற்றம் அல்ல . நீண்டகாலம் ஆகும். அது மட்டுமல்ல நிச்சயம் சில காலத்துக்குபின் சபை உடையும்.

அன்னிய பாஷையில் அர்த்தமில்லாமல் வைராக்கியம் கொண்டவர்கள் நிச்சயம் சிலர் அல்லது சில குடும்பங்கள் இருப்பார்கள். அவர்கள் உங்கள் சபையை விட்டு நிச்சயம் விலகி வேறு சபைக்கு போய்விடுவார்கள். நிச்சயம் இது நடைபெறாமல் சபையை சரியான வசனத்தில் வழி நடத்தமுடியாது. கர்த்தர் பரலோகத்தில் எதிர்பார்ப்பது பெரிய கூட்டம் அல்ல சிறிய கூட்டமே. அந்த சிறிய கூட்டமும் நீங்களும் உங்கள் சபையாக கர்த்தரின் சன்னதியில் காணப்படுவீர்கள். சில இழப்புகள் காணிக்கை இழப்புகள் யாவையும் நிங்கள் சந்திக்க வேண்டி வரும் என்று கூறி ஜெபித்து அனுப்பினேன். இப்படி பல குடும்பங்கள் சபை பாஸ்டர்கள் ஜாமக்காரனால் தெளிவு பெற்றார்கள்.

## துதி

அந்த குறிப்பிட்ட பாஸ்டர் மற்றொரு பிரதான கேள்வி கேட்டார். எங்கள் சபையில் ஆராதனை வேளையில் துதிக்க என்று கொஞ்ச நேரம் கொடுப்போம். அந்த நேரம் **பெருத்த சத்தமாக** இருக்கும். என் உதவி பாஸ்டர் அதை மிகவும் உற்சாகப்படுத்த அவரும் சபை மக்களைவிட மிக அதிக சப்தமாக **ஸ்தோத்திரம்** கூறி உற்சாகப்படுத்துவார். சபை ஜனங்கள் அந்த நேரத்தை மிகவும் விரும்புவார்கள். ஆகவே தலைமை பாஸ்டராகிய நான் அந்த துதி

ஆராதனை நடத்துவதைவிட உதவி பாஸ்டர் நடத்துவதை சபை மக்கள், சபை மூப்பர்கள் மிகவும் விரும்புகிறார். ஆகவே அந்த நேரத்தை உதவி பாஸ்டர் வசமே விட்டுவிட்டு நான் ஜெபத்தில் இருப்பேன்.

**இந்த சத்தம்** காரணமாக **அருகில் குடியிருப்பவர்கள்** போலீஸில் புகார் கொடுத்துள்ளனர். **காவல்துறை** என்னை அழைத்து உங்கள் சபையின் சப்தம் அருகில் உள்ளவர்களுக்கு இடையூறு உண்டாகாமல் பார்த்துக்கொள்ளுங்கள் என்று மிக மரியாதையோடு அறிவுறுத்தி அனுப்பிவிட்டார். நான் அதை யாரிடம் கூறவில்லை. மறுபடியும் ஒரு புகார் வந்தால் சபை மக்களுக்கு கூறலாம் என்று இருந்தேன். இப்போது உங்களிடம் அன்னிய பாஷை சந்தேகம் கேட்டு தெளிவுபடுத்தியதால் இனி தைரியமாக சபை மக்களிடம் கூறி மக்களிடம் கூறி சப்தம் குறைக்க செய்வேன் என்றார்.

**அன்னிய பாஷை** உற்பத்தியாவதே இந்த **சப்தத்தால்தான்** என்றேன். பெரும்பாலான **பெந்தேகோஸ்தே சபைகளில் ஜெப நேரத்தில் ஸ்தோத்திர பலி என்ற பெயரில் துதி. ஸ்தோத்திரத்தை** மட்டும் **கைதட்டி** மிக சப்தமாக **மிக மிக வேகமாக** கூற சொல்லுவார்கள்.

மௌனமாக இராதே வாய்திறந்து **துதி,ஸ்தோத்திரம்** சத்தமாக சொல்லு என்று உற்சாகப்படுத்துவார்கள். சப்தமிடாதவர்களை பலவித சம்பந்தமில்லாத வசனங்களை குறிப்பிட்டு பயமுறுத்தி சப்தமிட வைப்பார்கள். பின்னணியில் **வேகமாக பாடகூடிய பாடல்களை** தெரிந்தெடுத்து **டிரம்**(கொட்டு) அடி சப்தத்தை வேகப்படுத்துவார்கள். பாட்டின் சப்தத்தின் வேகம் கூடும்போதே சபை மக்கள் **ஸ்தோத்திரம் கூறுவதை** வேகப்படுத்துவார்கள். அப்படி சப்தமிட்டு பரவச நிலையின் உச்ச கட்டத்துக்கு போய் பாஸ்டர் மாதிரி **அன்னிய பாஷை பேசுவார்.** இப்போது சபை மக்கள் ஸ்தோத்திரம் சொல்வதை நிறுத்திவிட்டு கைகளை **வேகமாக தட்டிக்கொண்டே** அன்னிய பாஷை பேசி குதிப்பார்கள். சபையில் பெருபாலானவர்கள் தலையை ஆட்டி உடலை முறுக்கி(வலிப்பு) ஜன்னி வந்தவர்கள்போல் உடல் நடுங்க கத்துவார்கள் பாருங்கள். அத்தனை பெரிய ஆர்பாட்டம் செய்வதை அந்த ஆராதனையில் காணலாம்.

**அன்னிய பாஷையில் ஜெபியுங்கள் என்று சொன்னால் அப்படி ஜெபிக்க வேண்டாம்**

**Fr. பெர்க்மான்ஸ், பாஸ்டர்.மோகன்,** (A.G. சென்னை), நாலுமாவடி மோகன் சி.லாசரஸ் இன்னும் பலர் **அன்னிய பாஷையில் பேசுங்கள்** அன்னிய பாஷையில் **துதியுங்கள்** என்ற உற்சாகப்படுத்துவதை பல கூட்டங்களில் TV யில் நேரிலேயே காணலாம். Fr. பெர்க்மான்ஸ் அவர்கள் **நம் அப்பாவின் பாஷை** அன்னிய பாஷை ஆகும். அந்த **அன்னிய பாஷையில்** அப்பாவிடம் பேசுங்கள் என்று கூறுவார். இது **அறியாமையினால்** இந்த பெரிய ஊழியர்கள் இப்படி மக்களை **பையித்தியகாரர்களாக்குகிறார்களா?** அல்லது அன்னிய பாஷை பெயரில் மக்களை **ஏமாற்றுகிறார்களா?.**

நாலுமாவடியில் சிறு பிள்ளைகளுக்கான கூட்டத்துக்கு ஏராளமான பிள்ளைகளை அனுப்புவார்கள். அதற்கான விளம்பரத்தை TVயில் காண்பிக்கிறார்கள். அதில் 5ம் வகுப்பு, 7ம் வகுப்பு பையன்மார்கள் **கைகளைதட்டி,** தலையை ஆட்டி **நடுங்குவதை** நாங்கள் கண்டபின்தான் இப்படிப்பட்ட கூட்டத்துக்கு பிள்ளைகளை அனுப்பக்கூடாது. **சிறு வயதிலேயே** பேச நாலுமாவடி சகோ.மோகன் சி. லாசரஸ் கூட்டங்களில் போலியான **அன்னிய பாஷையை**

கற்றுக்கொள்ளுங்கள் என்று மிக ஞானமாக **அன்னிய பாஷை பேச கற்றுக் கொடுக்கிறார்கள்.** அதுவும் சகோ.மோகன் C. லாசரஸ் **அன்னிய பாஷையை** மேடையில் பேசுவதை கண்டவுடன் **சிறுபிள்ளைகளாலும் உணர்ச்சி வசப்பட்டு** அவரைப்போல பேச முயற்சிசெய்து பேச முடியாததால், **சத்தம் போட்டு அழவும்,** குதிக்கவும் ஆரம்பிக்கிறார்கள். ஆகவேதான் நாங்கள் **எங்கள் பிள்ளைகளை** நாலுமாவடிக்கு **அனுப்பவில்லை** என்று சில பெற்றோர் எழுதியிருக்கிறார்கள்.

இப்படி அன்னிய பாஷையில் பேசி நடுங்குவது வானத்திலிருந்து **வல்லமை இறங்கிவிட்டது. பெற்றுக்கொள், பெற்றுக்கொள்** என்று இவர்கள் மைக்கில் சப்தமிட்டு வேண்டுமென்றே ஜனங்களையும், பிள்ளைகளையும் **கிளர்ச்சி கொள்ள** செய்கிறார்கள்.

இந்த கன்றாவி காட்சியைதான் நம் இந்தியாவில் தமிழ்நாட்டில் **மாரியம்மன் பண்டிகையிலும்,** பிசாசுகளை ஓட்டும் **மந்திரவாதிகளின் கூட்டங்களிலும்** காண்கிறோமே! அதைப்போலவே இவர்கள் இடும் **சப்தமும்,** நடுங்குவதும், **ஆடுவதும்,** துள்ளுவதும் **சப்தமிடுவதும்** மேலே குறிப்பிட்ட ஊழியர்களின் கூட்டங்களில் சர்வ சாதாரணமாக காண்கிறோம்.

ஆனால் கூட்டத்தை முன்னின்று நடத்துபவர்கள் **மோகன் C. லாசரஸ்** ஆகட்டும், **Fr.பெர்க்மன்ஸ்** ஆகட்டும் அவர்கள் யாரும் அந்த ஜனங்கள் ஆடுவதுபோல் ஆடுகிறார்களா கவனியுங்கள். இந்த ஜனங்கள் குதிப்பதைபோல குதிக்கிறார்களா? ஜனங்கள் உளருவதைபோல இவர்கள் யாராவது உளருகிறார்களா?என்று கவனித்தீர்களா? இதுதான் ஏமாற்றுத்தனம் . இந்த **பரவச நிலையை** ஒருமுறை அனுபவித்துவிட்டால், இவர்கள் கூட்டம் எங்கு நடந்தாலும் தானாகவே அந்த **இன்பநிலை** மக்களை இழுத்துக்கொண்டேபோகும்.

இந்த **துள்ளல்,** ஆட்டம், **நடுக்கம்,** பரவசம் எந்த சபையில் உண்டோ அந்த சபையை தேடி இவர்களாவே காந்தம் இழுக்கும்போது **இரும்பு** நகர்வதைபோல இவர்களை இழுத்துக்கொண்டே போகும். இதை **பரிசுத்தாவியின் கிரியை** என்று வேதத்தில் எங்காவது இப்படிப்பட்ட சப்தமிடுதலை **ஸ்தோத்திரத்தை** சத்தமாக **வேகமாக** கூறவேண்டும் என்பதை நம் வேதம் எங்காவது சொல்லிக்கொடுக்கிறதா?

இந்த ஊழியர்களின் கூட்டங்களில் கலந்து இப்படி **அன்னிய பாஷையும்** ஸ்தோத்திரமும் **சத்தமாக கைதட்டி** பேசினவர்கள் **பக்தி விருத்தி** அடைந்தார்கள் என்று கூறமுடியுமா?

சிங்கப்பூர் ஊழியர் ஒருவர் இவர் TVயிலும் பிரசங்கம் செய்கிறார். சென்னையிலும் இவருக்கு சபை இருக்கிறது என்று எண்ணுகிறேன். அவர் கூறியதை நானே TVயில் கேட்டேன். ஒரு நாள் ஒரு நபர் **சிங்கப்பூரில்** இவரிடம் வந்து பாஸ்டர் குடியை நிறுத்த முடியவில்லை. மறுபடியும் மறுபடியும் மதுபானத்துக்கு அடிமையாகிறேன். நானும் கர்த்தாவே குடிக்கும் பழக்கம் என்னைவிட்டு நீக்கும் என்று பலமுறை அழுதும் அது நீங்கவில்லை என்றார். உடனே நான் துதியின் மகிமையை அந்த நபருக்கு கூறினேன். இனி குடி பழக்கத்தை என்னைவிட்டு நீக்கிபோடும் **என்று ஜெபிப்பதை விட்டுவிடு.** வெரும் **துதி மாத்திரம்** சொல்லு என்று கூறி அனுப்பினேன்.

வெரும் ஸ்தோத்திரத்தை மட்டும் கூறிக்கொணடேயிருந்த அவன் இப்பொது முற்றிலுமாய் குடி பழக்கத்திலிருந்து விடுவிக்கப்பட்டார். **துதியின் மகிமையை** ஒருவன் புரிந்துக்கொண்டால்

போதும் அவன் வாழ்கையே மாறும் என்ற அவர் பேசினார். இவர் கூறுவது முற்றிலும் பொய் சாட்சியாகும்.

**இதையும் அறியாமை என்பதா? அல்லத துர் உபதேசம் என்பதா?**

**ஸ்தோத்திரம்** துதி **இவை எதுவும்** ஒரு மனிதனை கெட்ட பழக்கத்திலிருந்து மாற்றாது. ஆவிக்குறிய ஜீவியத்தில் **ஸ்தோத்திரம் நம்மை** வளர்ச்சியடைய செய்யாது. **பக்தி விருத்தியடைய** செய்யாது. **வேத வசனம் மட்டுமே** நமக்கு **பக்தி விருத்தியை** உண்டாக்கும்.

## வசனத்தை கவனியுங்கள்

**"நீ நன்றாய் ஸ்தோத்திரம் பண்ணுகிறாய் ஆகிலும் மற்றவன் பக்தி விருத்தியடைய மாட்டானே". 1 கொ. 14:17**

தனி மனிதனாகிலும் சரி, சபை ஆராதனையானாலும் சரி. நாலுமாவடிபோல் உள்ள கூட்டங்களானலும் சரி வெறும் **ஸ்தோத்திரத்தை** இந்துக்கள் ராமஜெயம் என்று லட்சம் முறை எழுவதுபோல **ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம்** என்று கூறிக்கொண்டே இருப்பதால் அதை கூறும் உனக்கும் பிரயோஜனம் கிடையாது. **அதை கேட்கும் மற்றவர்களுக்கும் பக்தி விருத்தி உண்டாகாது.**

இப்போதெல்லாம் பெந்தேகோஸ்தே சபை ஆராதனைகளிலும், கிறிஸ்தவ TV சேனல்களிலும், கிறிஸ்தவ கூட்டங்களிலும் பாடும் பாடல்களிலும் **ஆராதனை, ஆராதனை** என்ற வாரத்தைகளை அர்த்தம் இல்லாமல் உபயோகிப்பதை காணலாம். ஒருவன் வாயில் **ஆராதனை ஆராதனை** என்று கூறிக்கொண்டேயிருந்தால் **அது ஆராதனைஆகிவிடுமா?**

அப்படியே **அல்லேலூயா, அல்லேலூயா** என்று வாரத்தைக்கு வார்த்தை கூறுவதால் அது தேவனை கனப்படுத்துமா? ஒருவன் சாட்சி கூறும்போது நான் ரயிலில் போய்க்கொண்டிருந்தேன். **அல்லேலூயா,** ஸ்டேஷனில் இறங்கி ஒரு நண்பரை கண்டேன் **அல்லேலூயா!** என்ன இது? எதற்காக இந்த அல்லேலூயா! என் தகப்பனார் இருதய அடைப்பினால் திடீர் என்று இறந்துபோனார். **அல்லேலூயா!** இன்று நான் தனிமையாக்கப் பட்டேன் அல்லேலூயா ! எதற்கெல்லாம் **அல்லேலூயா** கூறுவது என்பதற்கு விவஸ்தையில்லாமல் போனதே சங்கீதத்தில் 111ம் அதிகாரத்தில் எதையெல்லாம் நினைத்து சங்கீதக்காரன் அல்லேலூயா கூறுகிறார் என்பதை கவனியுங்கள்.

அதுபோலவே **ஸ்தோத்திரம்** கூறுவதும் **அர்த்தம் இல்லாமல்** கண்டதிற்கெல்லாம் ஸ்தோத்திரம் கூறுவது சர்வ சாதாரணமாகிபோனது. சில பாஸ்டர்கள் அல்லது பிரசங்கிமார் தன் பிரசங்கத்தில் ஒரு வார்த்தைக்கும் அடுத்த வார்த்தைக்கும் மத்தியில் **அல்லேலூயா** அல்லது **ஸ்தோத்திரத்தையும், ஆமென் என்று கூறுவதையும்** பிரசங்கத்தில் அடுத்த வார்த்தை சொல்ல அந்த இடைவெளியை பயன்படுத்திக் கொள்வார்கள். அப்படி அவர்கள் ஆரம்ப காலத்திலிருந்தே பிரசங்கம் செய்யும்போது பழகிக்கொண்டதால் அந்த **அல்லேலுயா** அல்லது **ஸ்தோத்திரத்தை** அவர்களால் விடமுடியவில்லை. இவைகளை சரிப்படுத்திக்கொள்வது நலம்

- சபை பாஸ்டராவது சாட்சி கூறுபவர்களிடம் அல்லேலுயா - ஸ்தோத்திரம் எப்போது சொல்லவேண்டும். அதன் அர்த்தம் என்ன? எந்த சூழ்நிலையில் அந்த வார்த்தையை உபயோகிக்கவேண்டும் என்பதை சொல்லிக்கொடுக்க வேண்டும்.

ஆமென் அடுத்தது மேலே கூறியவர்கள் கூட்டத்தில் அல்லது பெந்தேகோஸ்தே சபைகளில் ஆமென் சொல்லுங்கள் என்பார்கள். பிரசங்கித்துக்கொண்டு இருக்கும்போதே என்னங்க ஒரு **ஆமென்** சொல்லக்கூடாதா என்பார்கள். கர்த்தர் சிவந்த சமுத்திரத்தை கடக்கச் செய்தார். ஆமென். சபை மக்களை பார்த்து ஏங்க நீங்கள் ஆமென் சொல்ல மாட்டீர்களா? என்பார். உடனே ஆமென் என்று சத்தமாக கூறுவார்கள். எதற்கு இந்த ஆமென், முதலாவது ஆமென் என்றால் அப்படியே ஆகக்கடவது. இதன்அர்த்தம் தெரியாமல் வார்த்தைக்கு வார்த்தை ஆமென் சொல்லவைப்பது முட்டாள்தனம் அல்லவா! யூதாஸ் காரியூத் நான்றுகொண்ட செத்தான். ஆமென். நீங்களும் ஆமென் என்று சத்தமாக கூறுங்கள் என்று பாஸ்டர் கூறுவார். இப்போது நீங்களே சிந்தித்துப் பாருங்கள். தூக்குபோட்டு செத்தவனுக்கு ஆமெனா? அது அப்படியே ஆகக்கடவது என்றல்லவா அர்த்தம். பாஸ்டர் எதற்கெடுத்தாலும் ஆமென் சொன்னால் நீங்களும் ஆமென் சொல்லிவிடுவதா? ஜெபம் முடிந்தபிறகு சொல்ல வேண்டிய வார்த்தை. ஒருவர் ஜெபிக்க நாமெல்லாரும் ஆம் ஆணடவரே அப்படியே ஆகட்டும் எனலாம்.

பழைய ஏற்பாட்டில் கர்த்தர் நம் மத்தியில் பெரிய அற்புதத்தை செய்திருக்கிறார் என்று யோசுவா கூற இஸ்ரவேல் மக்கள் கர்த்தருக்குமுன் ஆமென் என்றார்கள், அப்படியே கர்த்தரின் கிருபை எபபோதும் உண்டாகட்டும்.

இப்படி அர்த்தத்தோடு உள்ள வார்த்தையை நாம் உபயோகிக்கலாம். அதனால் சபையில் பழக்க தோஷத்தில் சில பாஸ்டர்கள் ஆமென் ஆமென் என்பார்கள். நீங்களும் பைத்தியகாரர்களைப்போல ஆமென் வார்த்தையை உபயோகிக்காதீர்கள்.

## அதைப்போலவே அன்னிய பாஷையைப்பற்றியும் விளங்கிக்கொள்ள வேண்டியது அவசியம்

இதுவரை **தனிப்பட்ட நபர்களின்** வாழ்க்கையிலும், சில **பாஸ்டர்மார்களின் வாழ்க்கையிலும்** அன்னிய பாஷையைக்குறித்து **அவர்கள் தெளிவு பெற்றதையும்** கடந்த மாத ஜாமக்காரனிலும் சில அனுபவங்களைக்குறித்தும் எழுதியதையும் வாசித்தீர்கள். இவர்களின் அனுபவங்கள் யாவும் வேத புத்தகத்தின **முகம்பார்க்கும் கண்ணாடி** என்று கூறலாம். முகம் பார்க்கும் கண்ணாடியில் **ஒரு வார்த்தையை** பார்த்தால் **ஆம்புலன்ஸ் மாதிரி தலைகீழாக தெரியும்.** அதே மாதிரி இதுவரை குறிப்பிட்டவர்கள் பேசி பழக்கப்பட்ட தவறான அன்னிய பாஷையை நம் வேத புத்தகம் என்ற முகம் பார்க்கும் கண்ணாடி தலைகீழாக காட்டி **அதை தவறு** என்று உணர வைத்தது.

சரி இப்போது வேத வசனத்தின் வழியாக அன்னிய பாஷை பேசுவது எப்படி தவறு என்று பார்க்கப்போகிறோம்.

அன்னிய பாஷையானது **வரம்** அது **அடையாளம் அல்ல**

ஆவியானவருடைய அனுக்கிரகம் (வரம்) அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது. 1 கொ. 12:7. இந்த வசனம் **தமிழ் மொழிபெயர்ப்பில்** நூற்றுக்கு நூறு தவறாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

அக்காலத்தில் எழுதப்பட்ட தோல் சுருளிலும், ஆங்கில மொழிபெயர்ப்பிலும். மலையாளம் மற்றும் எல்லா மொழி பெயர்ப்பிலும் ஆவியானவரின் வரம் அல்லது அனுக்கிரகம் **பொது பிரயோஜனத்துக்காக** அருளப்பட்டதாகும். **தனி மனிதனின் பிரயோஜனத்துக்கு அல்ல** என்பதை முதலாவது அறிந்து கொண்டால்தான் தொடர்ந்து இதைப்பற்றி எழுதபோகும் விவரங்கள் உங்களுக்கு விளங்கும். இப்போது 12ம் அதிகாரத்தை வாசித்து பாருங்கள்.

இதை வாசிக்கும் முன் முதல் அத்தியாயத்தில் நான் குறிப்பிட்டதை போல ஒரு வசனத்தை தியானிக்கும்போது

அது யாருக்காக எழுதப்பட்டது.

அது எந்த சூழ்நிலையில் எழுதப்பட்டது.

அது தனி நபருக்கு எழுதப்பட்டதா?

அது சபை மக்களுக்காக எழுதப்பட்டதா?

அது எழுதப்பட்டதின் நோக்கம் என்ன?

அது எந்த காரணத்தால் எழுதப்பட்டது.

அது யாரால் எழுதப்பட்டது.

இவைகளை தியானிக்காமல் வாசித்தால் வசனத்தின் அர்த்தம் தவறான விளக்கத்தை கொடுத்துவிடும். வேத வசனம் இருபுறமும் கருக்குள்ள பட்டயமாகும். இதை சரியாக விளங்கிக் கொள்ளாவிட்டால் அது ஆபத்தாக முடியும். நம் ஆவிக்ககுறிய வழியையே திசை திருப்பிவிடும். இப்போ 1 கொரி. 12ம் அதிகாரத்தில் சில வசனங்களை அப்படியே எழுதுகிறேன்.

வெறும் வசனத்தை மட்டும் நான் குறிப்பிட்டால் உங்களில் பலர் அதை எடுத்து வாசிக்க சோம்பேறித்தனம் காட்டுவார்கள். ஆகவே அந்த வசனங்களை சிரமம் பாராமல் வேதத்தில் உள்ளபடியே எடுத்து எழுதுகிறேன். நீங்கள் அப்படியே எடுத்து வாசிக்க அது உதவியாக இருக்கும்.

1 கொரி 12:6-11 இதை பவுல் அப்போஸ்தலன் 16 பாஷைகளை இணைத்து ஆராதித்துக்கொண்டிருக்கிற **கொரிந்து பட்டணத்தில்** உள்ள சபை **மக்களுக்காக மட்டுமே** எழுதுகிறார். இந்த ஆலோசனை **மற்ற எந்த சபைக்கும் பொருந்தாது.** கொரிந்து சபையில் பாஷைகளின் குழப்பம் இருந்ததால் அதை தெளிவுபடுத்த பவுல் கடிதமாக எழுதி அதை சபையில், சபை **ஜனங்கள் கேட்க வாசிக்க சொல்வது** பவுலின் வழக்கமாகும்.

சரி இப்போது கவனியுங்கள் **அன்னிய பாஷை வரம்** (Gift) அது பரிசுத்த ஆவியானவரின் **நிறைவுக்கு அடையாளம் அல்ல.** **வரம்** வேறு - **அடையாளம்** வேறு.

**வரம்** (Gift) கொடுக்கப்படுவது. அதை கேட்கக்கூடாது. வரம் கர்த்தரால் சபைக்காக **கொடுக்கப்பட்டது.** ஆனால் சபை மக்கள் **ஆராதனையில் பேசுவதற்கல்ல,** அந்த வரத்தை சபையில் தமக்கு பரியச்சமாணவர்களுக்கு மட்டுமே கொடுக்கிறார். அதை பணம் கொடுத்து வாங்க முடியாது. **உபவாசம்** செய்தும், **ஜெபித்தும்** அந்த **வரங்களை வாங்க முடியாது.** 1 கொரி. 12:4-11

1) வரங்களில் **வித்தியாசம் உண்டு** - ஆவியானவர் ஒருவரே
2) ஊழியங்களிலேயும் **வித்தியாசம் உண்டு** - கர்த்தர் ஒருவரே
3) கிரியைகளிலேயும் **வித்தியாசம் உண்டு** - எல்லாருக்குள்ளும், எல்லாவற்றையும் நடப்பிக்கிற தெய்வம் ஒருவரே.
4) ஆவியானவருடைய **(வரம்)** அனுக்கிரகம் **பொது பிரயோஜனத்திற்கென்றே** அளிக்கப்பட்டுள்ளது. (தமிழ் மொழிபெயர்ப்பு இந்த வார்த்தையை தவறாக அவனவனுடைய பிரயோஜனத்துக்கென்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஆங்கில வேதத்தை வாசித்து விளங்கிக்கொள்ளுங்கள். அர்த்தம் மாறினால் உபதேசம் மாறும்.)
5) எப்படியெனில்

**ஒருவனுக்கு** ஞானத்தை போதிக்கும் வசனமும்

**வேறொருவனுக்கு** அந்த ஆவியினாலேயே **அறிவை உணர்த்தும்** வசனமும்
**வேறொருவனுக்கு** அந்த ஆவியினாலேயே விசுவாசமும்
**வேறொருவனுக்கு** அந்த ஆவியினாலேயே குணமாக்கும் வரங்களும்
**வேறொருவனுக்கு** அற்புதங்களைச் செய்யும் சக்தியும்
**வேறொருவனுக்கு** தீர்க்கதரிசனம் உரைத்தலும்
**வேறொருவனுக்கு** ஆவிகளைப் பகுத்தறிதலும்
**வேறொருவனுக்கு** பற்பல பாஷைகளைப் பேசுதலும்
**வேறொருவனுக்கு** பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதலும் அளிக்கப்பட்டிருக்கிறது.

(மேலே குறிப்பிட்ட வரங்கள் யாவையும் அந்த ஒரே பரிசுத்த ஆவியானவர் ஒருவரே அருளி தமது சித்தத்தின்படியே **அவனவனுக்குப்** பகிர்ந்து கொடுக்கிறார். **வேறொருவனுக்கு** என்ற வார்த்தையை பவுல் **எத்தனை முறை குறிப்பபிடுகிறார்.** கவணியுங்கள்.

## இதில் முக்கியமாக கவனிக்க வேண்டியது.

**எல்லாவித வரங்களும் அவனவனுடைய பிரயோஜனத்துக்காக ஆவியானவர் கொடுக்கவில்லை. வரங்கள் யாவும் சபைக்காக,** சபைக்குள்ளில் உள்ளவர்களுக்கு **பொது பிரயோஜனத்துக்காகவே** கொடுக்கப்பட்டுள்ளது எனபதை கவனிக்கவும்.

மேலும் **வரங்கள்** யாவும் பரிசுத்த **ஆவியானவர்தான்** கொடுக்கிறார். ஆனால் அதற்காக **ஆவியானவரை நோக்கி** ஆவியானவரே! எனக்கு **இதை கொடும், அதை கொடும்** என்று ஜெபத்தில் ஆவியானவரிடம் கேட்கக்கூடாது. ஆவியானவர் சம்மந்தப்பட்ட அனைத்தும் **கிறிஸ்துவின்** மூலமாக மட்டுமே பெற்றுக்கொள்ளமுடியும். இயேசு சொன்னார். **என் நாமத்தில்** நீங்கள் வேண்டிக்**கொள்வது எதுவோ** அதை **பிதாவானவர்** உங்களுக்கு **அருள்வார்** என்று கூறினார்.

பரிசுத்தாவியானவரை கேட்டுப்பெற்றுக்கொள்ளவேண்டும் என்று இயேசு கூறினாரே!

☐ சுவிசேஷ புத்தகத்தில் இயேசு கூறினாரே, மகன் **மீனைக்கேட்டால்** தகப்பன் **பாம்பை** கொடுப்பானா என்ற உதாரணத்தை கூறி அதுபோல நீங்கள் **பரிசுத்த ஆவியானவரை** கேட்டால் பரிசுத்தாவியானவரை உங்களுக்கு கொடுப்பது அதிக நிச்சயமல்லவா? என்றார். உண்மைதான்.

இப்போது கவனிக்கவேண்டியது நான் முதல் அத்தியாயத்தில் கூறியபோது ஒரு விஷயம் (வசனம்) **எப்போது** கூறப்பட்டது. **எந்த சூழ்நிலையில்** கூறப்பட்டது என்பதை முக்கியமாக கவனிக்கவேண்டும்.

இயேசு கிறிஸ்து மேலே கூறிய விஷயம். அவர் **இந்த பூமியில் மனுஷனாக** உயிரோடு இருந்த சமயத்தில் கூறியதாகும்.

யோ. 14:16ன்படியும் **யோவேல்** தீர்க்கதரிசனத்தின்படியும் **மாம்சமான யாவரின்மேலும் என் ஆவியை** ஊற்றுவேன். இது எந்த காலத்தில் நடக்கும் தீர்க்கதரிசனம். இயேசு கிறிஸ்து மரித்து உயிர்தெழுந்து **புதிய ஏற்பாட்டு சபை உருவான பிறகு** அப் 2ம் அதிகாரத்தில் அது நிறைவேறியது. அதேபோல இயேசுகிறிஸ்து மீனையும் - பாம்பையும் உதாரணப்படுத்தி **ஆவியானவர் வேண்டும்** என்று கேட்க சொன்னது இயேசு கிறிஸ்து **சிலுவையில் மரிக்கும்** முன் வாழ்ந்த காலத்தில் கூறியதாகும். அந்த குறிப்பிட்ட காலம் **ஆவியானவர் எல்லார் மேலும் அருளப்படாத காலம் ஆகும் .**

அது அந்த காலத்துக்கு மட்டுமே பொருந்தும். ஆனால் இப்போது **மனம் திரும்பின** எல்லார் மேலும் நாம் **வேண்டிக்கொள்ளாமலேயே** ஆவியானவர் நம் உள் வந்துவிடுகிறார். எபே. 1:13

□ இயேசு கிறிஸ்து வாழ்ந்த காலத்தில் **மோசே விவாகரத்து செய்யலாம்** என்று குறிப்பிட்டதை இயேசுகிறிஸ்துவிடம் சுட்டிக்காட்டியபோது **விபச்சாரத்தின் நிமித்தம்** கையும் களவுமாய் ஒரு மனைவி பிடிபட்டால், அப்படிப்பட்ட மனைவியை விவாகரத்து செய்யலாம் என்று கூறி, ஆகிலும் பிதாவின் சித்தம் அப்படியல்ல. கணவன் - மனைவி பிரியக்கூடாது என்று கூறினார். இயேசு கூறியது **நியாயபிரமாண காலம்.** இயேசு கிறிஸ்து சிலுவையில் மரிக்கும் வரை நியாய பிரமாண சட்டங்களை அனுசரித்தே தன் உபதேசங்களை ஞானத்தோடு கூறினார்.

10 கற்பனையை எடுத்துக்கொள்ளுங்கள் - அதைப்பற்றி இயேசு கூறும்போது **உன்னைபோல் பிறனை** நேசி என்ற வார்த்தைக்குள் **10 கற்பனைகளையும் அடக்கிவிட்டார்.** என்னை கொலை செய்ய நான் அனுமதிக்கமாட்டேன். ஆகவே கொலை செய்யாதிருப்பபாயாக என்ற தனி உபதேசம் வேண்டாமே. **உன்னைபோல் பிறனை** நேசி என்ற வார்த்தைக்குள் எல்லா் 10 கட்டளைகளும் அடங்கிவிட்டது.

இயேசு கிறிஸ்து மரித்து **உயிர்த்தெழுந்தபின்** பவுல் எழுதுகிறார். 1 கொரி. 6:10,6 விவாகம் செய்தவர்களுக்கு நான் அல்ல **கர்த்தர் உரைக்கிறதாவது** என்று ஆரம்பித்து கணவன் -மனைவி பிரியகூடாது இதுதான் பிதாவின் சித்தம். 1 கொரி. 13ம் அதிகாரத்தில் **இயேசுவின் மேல் வைத்த அன்பு** சகலத்தையும் நம்பும், சகிக்கும் இப்போது கவனியுங்கள். சிலுவையில் அறையப்பட்ட இயேசுவின் மேல் வைத்த அன்பானது **விபச்சாரத்தில் கையும்** களவுமாய் பிடிக்கப்பட்டிருந்தாலும் அவள் என்னை பார்த்து **மன்னித்துவிடுங்கள்** இனி **விபச்சாரம்** செய்யமாட்டேன் உங்களோடு மட்டும் உண்மையான மனைவியாக வாழுவேன் என்று கூறினால் 1 கொரி 13 அதிகாரம் பிரகாரம் **கிறிஸ்துவின் மேல் வைத்த அன்பு** அவள் கூறியதை **நம்பும் அவளை ஏற்றுக்கொள்ளும்.** அதனால் ஏற்படும் **அவமானத்தை** கணவனாகிய அவன் **சகித்துக்கொள்வான்.** உபதேசம் எப்படி மாறுகிறது என்பதை கவனியுங்கள் இப்படித்தான் நாம் வேதத்தை தியானித்து அர்த்தம் கொள்ள வேண்டும்.

# திரும்பிப் பார்க்கிறேன்

No. 10

(என் வாழ்க்கையில், என் ஊழியத்தில் ஏற்பட்ட பல அனுபவங்களை **திரும்பிப் பார்க்கிறேன்** என்ற தலைப்பில் என் ஜாமக்காரன் வாசகர்களுக்காக எழுதி வருகிறேன்.)

பல வருடங்களுக்குமுன் இந்தியாவில் கேரளா என்ற மாநிலத்தில் **கோட்டயம்** என்ற ஊரில் நடந்த ஒரு நிகழ்ச்சி என் ஞாபகத்தில் வருகிறது.

கணவன், மனைவி, ஒரு ஆண் குழந்தை ஆகிய மூன்று பேர்கள் அடங்கிய பாரம்பரிய **மார்தோமா சபை** கிறிஸ்தவ குடும்பம் இருந்தது.

கணவன் – மிலிடெரி ஆபீஸர், வருடத்துக்கு ஒருமுறை ஒரு மாத லீவில் வீட்டுக்கு வருவார். தானும் குடிப்பார், தன் மனைவியையும் குடிக்க வைப்பார், மிகவும் சந்தோஷமாக உலகப் பிரகாரமான சந்தோஷமாக இக்குடும்பம் வாழ்ந்து வந்தது.

ஆனால் சூழ்நிலையின் காரணமாக தன் கணவனுடைய நண்பன் ஒருவனோடு மிலிடெரி ஆபீஸரின் மனைவிக்கு கள்ள தொடர்பு ஏற்பட்டது. இந்த கள்ள காதலனை சந்திக்க அடிக்கடி ஆபிஸரின் மனைவி அவன் இருப்பிடம் தேடி போவாள்.

பலர் இதை கவனித்தார்கள். சபை போதகரிடம் கூறினார்கள். அதோடு இந்த மிலிடெரி ஆபீஸருக்கு மொட்டை கடிதம் மனைவியின் நடத்தை பற்றி ஊரில் உள்ள சிலர் எழுதினார்கள். இதை வாசித்த அந்த மிலிடெரி ஆபீஸர் மிக மூர்க்க கோபங்கொண்டு இம்முறை நான் விடுமுறையில் வீட்டுக்கு திரும்பினால் உன்னை கொலை செய்துவிட்டுதான் மறு வேலை என்று கோபாவேசத்துடன் தன் மனைவிக்கு கடிதம் எழுதினான்.

கணவன் விடுமுறையில் திரும்பும் நாள் வந்தது. அதற்குள் மனைவி குழந்தையை வீட்டில் விட்டுவிட்டு தன் கள்ள காதலனின் வீட்டுக்கு ஓடிவிட்டாள்.

வீட்டுக்கு திரும்பிய ஆபீஸர் தன் மனைவி வீட்டைவிட்டு ஓடிவிட்டதை அறிந்து அவள் அப்படியே ஒழிந்து போகட்டும், இனி அவள் எனக்கு வேண்டாம் என்று கூறி தன் விடுமுறை நாட்களை நீடித்து இரண்டு மாதங்கள் வீட்டில் தங்கினார். இப்போது விடுமுறை முடியப்போகும் நாள் சமீபித்தது, தன் குழந்தையை எப்படி யாரிடம் விட்டு போவது என்று மிகவும் குழம்பிப்போனார்.

ஒரு நாள் மீன் மார்கெட்டில் வைத்து தன் மனைவியை சந்தித்தார். கோபங்களை மாற்றி அவளோடு பேசி நான் உன்னை ஒன்றும் செய்யமாட்டேன். நீ பழைய தொடர்பை விட்டு விடுவாயானால் இப்போதே என்னொடு வா. நானும் தவறு செய்திருக்கிறேன், நீயும் தவறு செய்திருக்கிறாய், நான் உன்னை மன்னிக்கிறேன், எனக்காக இல்லாவிட்டாலும் நம் குழந்தைக்காவது வீட்டுக்கு திரும்பு என்று கேட்டுக்கொண்டார்.

மனைவி வீடு திரும்பினாள், மீண்டும் சந்தோஷமாக ஒன்றாக இருந்து விடுமுறை முடித்து ராணுவ முகாமுக்கு ஆபீஸர் திரும்பினார். ஒரு வருடம் கழித்து முறைப்படி கிடைக்கவேண்டிய விடுமுறை இந்த ஆபீஸருக்கு கிடைக்காமல் பாகிஸ்தான் போருக்காக பதவி உயர்வு கொடுத்து நாட்டின் எல்லைக்கு அனுப்பிவிட்டார்கள்.

வருடங்கள் கடந்தது. இங்கு வீட்டில் ஆபீஸரின் மனைவி பழையபடி மீண்டும் பாவத்தில் விழுந்தார். அதே பழைய கள்ள காதலனின் தொடர்பு ஏற்பட்டது.

முன்பெல்லாம் இவள் அவனை தேடி இரகசியமாக அவன் வீட்டுக்கு போய் வருவான். ஆனால் இப்போதோ அவனே இவளை தேடி வீட்டுக்கு வந்துபோவான்.

இவ்விவரம் சபையில் உள்ள பலரால் பேசப்பட்டது. சபை போதகரே நேரில் நிலைமையை ஊர்ஜிதப்படுத்தி இவள் புருஷனாகிய மிலிடெரி ஆபீஸருக்கு கடிதம் எழுதி அறிவித்தார். கடிதம் வாசித்த ஆபீஸர் தன் வேலையை ராஜினாமா செய்து வீடு திரும்பினார்.

ஆபீஸர் வீடு திரும்புகிறார் என்ற விவரம் அறிந்த இவளின் கள்ள காதலன், தன்னை ஆபீஸர் தாக்கக்கூடும் , ஒருவேளை கொலை நடத்தாலும் நடக்கும் என்று பயந்து பம்பாய்க்கு ஓடிவிட்டான்.

ஆகவே, ஆபீஸரின் மனைவிக்கு இனி எங்கு ஓடுவது என்று அறியாமல் நடப்பது நடக்கட்டும் என்ற தன் புருஷனுக்கு தான் தவறு செய்யவில்லை என்றும், கள்ளக் காதலனை துரத்திவிட்டேன். இனி அப்படி சந்தேகப்படும்படி நடக்கமாட்டேன் என்றும் ஒரு கடிதம் எழுதி தன் மகனின் கையில் கொடுத்து தன்னை மன்னிப்பதாய் இருந்தால் கதவை திறப்பதாகவும் இல்லை என்றால் மின் விசிறியில் கயிற்றைகட்டி தற்கொலை செய்து கொள்ளப்போவதாகவும் எழுதி தன் அறைக்கு சென்று கதவை தாழ்ப்பாள் போட்டுக்கொண்டாள்.

புருஷன் வந்தார், விபரம் அறிந்தார், தான் இனி வேலைக்கு போகப்போவதில்லை. ஆகவே தவறு நடக்காமல் தன் மனைவியுடனே இருக்கலாம் என்று மனம்மாறி அவளை மன்னித்து தண்டனை ஏதும் கொடுக்காமல் சேர்த்துக்கொண்டார். அந்த குடும்பம் மிக சந்தோஷமாக வாழ்ந்து கொண்டிருந்தது.

இந்த சூழ்நிலையில்தான் என்னுடைய கூட்டம் கோட்டயத்தில் நடைபெற்றது. அந்த கூட்டத்தில் இந்த ஆபீஸருடைய மனைவி இரட்சிக்கப்பட்டாள். இருதயம் நொருங்கி தன்

கடந்தகால பாவத்துக்காக மனம் கசந்து அழுதாள் அவள் தன் இதயத்தை கர்த்தருக்கு முழுவதுமாய் ஒப்புக்கொடுத்தாள்.

ஒரு வருடம் கடந்தது, அந்த சகோதரி எனக்கு கடிதம் எழுதினாள், அதில் தான் பின்மாற்றம் அடைவதாகவும், பழைய பாவ எண்ணம் மறுபடியும் தன்னை வேதனைப்படுத்துவதாகவும் தன் சபையில், தன் ஆத்துமா வளர எந்த வழியும் இல்லை என்னசெய்வது என்று கேட்டு எழுதினாள்.

அதற்கு உங்கள் ஆத்துமா விழாமல் இருக்க வேண்டுமானால் இரட்சிக்கபட்டவர்களுடன் இணைந்து ஜெபிக்க வேண்டும். அப்படிப்பட்ட ஜெப ஐக்கியம் உங்களை விழாமல் காப்பாற்றும். அதோடு உங்கள் இரட்சிப்பை மற்றவர்களுக்கு அறிவிக்க வேண்டும் என்பதாக ஆலோசனை கூறி எழுதினேன்.

அதற்கு அந்த சகோதரி நீங்கள் எழுதியபடி இரட்சிக்கப்பட்டவர்களுடைய ஜெபக்குழு அல்லது ஜெபகூட்டம் எங்கள் சபையில் கிடையாது. ஞாயிறு ஆராதனையோடு சரி. எங்கள் சபையில் வேறு எந்த ஆவிக்குரிய நடவடிக்கைகளும் கிடையாது. ஆனால் அருகில் ஒரு வீட்டில் ஜெபகூட்டம் நடைபெறுகிறது, அக்கூட்டத்தில் எல்லா சபையில் உள்ளவர்களும் வந்து கலந்து கொள்கிறார்கள். இப்போது நான் அங்குபோய் அந்த ஜெபகூட்டத்தில் கலந்து கொள்கிறேன் என் மனதுக்கு மிகவும் ஆறுதலாகவும் பிரயோஜனமாகவும் இருக்கிறது என்று எழுதினார்.

நானும் கர்த்தருக்கு ஸ்தோத்திரம் கூறி அவளின் பழைய நிலைக்கு போய்விடாதபடி இருக்க ஜெபித்துக்கொண்டனே்.

**புதிய பிரச்சனை**

சில மாதங்கள் இவள் வாழ்க்கையில் பெரும் ஆவிக்குரிய மாற்றம் ஏற்பட்டது. இப்போது தன் புருஷனின் இரட்சிப்பிற்காக ஜெபிக்க தொடங்கினாள்.

இவளின் புருஷனான அந்த மிலிடெரி ஆபீஸர் தன் சபையில் மூப்பனாக தெரிந்தெடுக்கப்பட்டார். இப்போதுதான் புதிய பிரச்சனை ஆரம்பமானது.

சபையில் உள்ள சிலர் இந்த ஆபீஸரை பார்த்து **உன் மனைவி பெந்தோகோஸ்தே** பெண்ணாக மாறி விடாமலிருக்க அந்த வீட்டில் நடக்கும் ஜெப கூட்டத்துக்கு போவதை தடுத்துவிடு என்றார்கள். அந்த ஆபீஸரும் தன் மனைவியிடம் இதை கூறினார்.

அதற்கு அவள் ஜெப கூட்டம் நடக்கும் வீட்டினரும் நம் சபையை சேர்ந்தவர்கள்தானே, அவர்களும் ஒழுங்காக ஆராதனை நடவடிக்கைகளில் கலந்துகொள்கிறார்களே, நானும் சபை நடவடிக்கைகளில் ஒழுங்காக கலந்துகொள்கிறேனே, பின் ஏன் என்னை ஜெப கூட்டத்துக்கு போவதை தடுக்கிறீர்கள்.

சபையில் எல்லாரும் இதைப்பற்றி கேட்கிறார்கள். நீ இனி அந்த வீட்டுக்கு போகக்கூடாது என்று கண்டிப்பாக கூறிவிட்டார்.

அவள் கதறி அழுதாள், தயவுசெய்து என்னை தடுக்காதீர்கள். நான் இன்று பழைய பாவத்துக்கு போகாமல் இருப்பதே இந்த ஜெப ஐக்கியத்தால்தான். நான் உங்களிடம் நகை, புடவை ஏதும் கேட்கவில்லை, என்னை ஜெபத்துக்கு போகவிடுங்கள் என்று அழுதாள்.

ஆனால் புருஷன் இணங்கவில்லை . பிறகு அவள் பிடிவாதமாக நீங்கள் தடுத்தாலும் நான் போவேன் என்றுகூறி ஜெப கூட்டத்திற்கு போவதை தொடர்ந்தாள்.

இந்த சூழ்நிலையில் மறுபடியும் ஆறு வருடத்துக்கு பிறகு அதே **கோட்டயம்** பட்டினத்தின் மறு கோடியில் **ஐமனம்** என்ற இடத்தில் என் கூட்டங்கள் நடைபெற்றன. அப்போது இந்த ஆபீஸரின் சபை போதகரும் சபை மூப்பன்மார்களும் என்னை ஆலயத்தில் சந்தித்து இந்த ஆபீஸரின் வீட்டுக்கு நியாயம் வைக்க, மத்தியஸ்தம் செய்ய என்னை அழைத்தார்கள்.

என்னை அழைக்க காரணம் அந்த ஆபீஸரின் மனைவி என் கூட்டத்தில் இரட்சிக்கப்பட்டதால் இவ்விவகாரத்தில் நான் கூறினால் அவள் கீழ்படிவாள் என்று சபை பெரியவர்கள் நினைத்தார்கள், வீட்டில் போதகர், நான், சபை பெரியவர்கள், அந்த ஆபீஸர், அவரின் மனைவி ஆகியவர்கள் கூடியிருக்க முதலில் நான் நடந்த விவரத்தை விசாரித்தேன்.

இப்போது என்ன செய்யவேண்டும் என்றேன். அதற்கு அந்த ஆபீஸர் இவள் என் வார்த்தைக்கு கீழ்படிவதில்லை. ஆகவே இனி அவளோடு வாழ்க்கை நடத்த முடியாது, இந்த விவாகரத்து கடிதத்தில் அவளை கையெழுத்து போடும்படி நீங்கள் கேட்டுக்கொண்டால்போதும் என்றார்.

உடனே போதகரை பார்த்தேன், அவர் என் பார்வையின் அர்த்த்ததை புரிந்துகொண்டு ஆமாம் டாக்டர் இனி இவள் அடங்கமாட்டாள். நானும் எவ்வளவோ ஆலோசனை கூறினேன். தொடர்ந்து அந்த ஜெப கூட்டத்துக்கு போய்க்கொண்டுதான் இருக்கிறாள். ஆகவே அவள் பிரிந்து போய்விடுவது நல்லது என்றார்.

உடனே நான் கூறினேன். **இவர்களை பிரித்து விடவா** என்னை அழைத்து வந்தீர்கள்.

போதகரய்யா (அச்சன்) இவர்களின் கடந்த கால வாழ்க்கை உங்களுக்கு தெரியாது. நீங்கள் சமீபத்தில்தான் இடமாற்றம் (Transfer) ஏற்பட்டு இந்த ஆலயம் வந்தீர்கள்.

இதே பெண் புருஷனை வைத்துக்கொண்டே **கள்ளக் காதலனோடு** வாழ்ந்தவள். ஊரே அவளைப்பற்றி மிக அசிங்கமாக பேசியது. பலமுறை அவளை இதே ஆபீஸரால் கொலை செய்யப்பட இருந்தாள்.

ஆனால் அப்பொழுதெல்லாம் பலமுறை அவர் அவளை மன்னித்து பரவாயில்லை, **நீயும் தவறு** செய்திருக்கிறாய், நானும் தவறு செய்திருக்கிறேன் என்று கூறி பகிரங்கமாக தனக்கு துரோகம் இழைத்தவள் என்று அறிந்திருந்தும் **மறுபடியும் மறுபடியும்** இவளோடு சேர்ந்து வாழ்க்கை நடத்தினார்.

ஆனால் அப்போதெல்லாம் **விவாகரத்து** கேட்காத இவர் இப்போது **விவாகரத்து** கேட்கிறராரே! இந்த சகோதரி செய்த தவறென்ன?

சபையை விட்டுவிட்டு வேறு சபைக்கு போய் விட்டாளா? சபை நடவடிக்கைகளில் பங்குகொள்ளவில்லயா?

**சந்தா** (வரி) கொடுக்கவில்லையா, **திருவிருந்து** (குருபானை) கைகொள்ளவில்லையா?

இவள் மீது என்ன தவறு கண்டீர்கள் !

**கள்ள புருஷனோடு** அடிக்கடி ஓடிப்போனவள் **மனந்திரும்பி** தன் தவறை **ஊர் அறிய சாட்சி கூறி** தன்னை இயேசுதான் தன் இரத்தத்தால் என்னைக் கழுவி மறுபிறப்பின் (இரட்சிப்பின்) அனுபவத்தை கொடுத்தார் என்று கூறி இப்போது **பரிசுத்த வாழ்க்கை** வாழ்ந்து கொண்டிருக்கிறாளே, அதனால் விவாகரத்து கேட்கிறீர்களா? தன் புருஷனும் தன் சபையும் இரட்சிக்கப்படவேண்டும் என்று தினம் தினம் **உபவாசித்து அழுகிறாளே** அதனால் விவாகரத்துக்கு சிபாரிசு செய்கிறீர்களா?

தன் கூட்டில் **ஆகாரம்** இல்லாத **எறும்பு** வெளியில் சென்று ஆகாரம் தேடுகிறது. ஆனால் **ஆகாரம்** கிடைத்த இடத்தில் **உட்கார்ந்து சாப்பிடாமல்** அந்த ஆகாரத்தை **தன் கூட்டுக்கு** எடுத்துவந்து **மற்றவர்க்கு பகிர்ந்து கொடுக்கிறது.** இப்படிப்பட்ட சிந்தையோடு ஆத்ம **ஆகாரத்தை** தேடி **வெளியில் செல்வது** தவறில்லை. என் வாழ்க்கையில் நான் மனந்திரும்பி இரட்சிப்பின் அனுபவம் கிடைத்த உடன் என் ஆத்தும வளர்ச்சிக்கு பல சபைகளுக்கு சென்று ஆகாரம் பெற்றுக்கொண்டதால்தான் நான் இந்த அளவு உயர்ந்திருக்கிறேன். என் சபை ஆகாரத்தை மட்டும் நம்பியிருந்தால் என் ஆவிக்குரிய ஜீவியம் அப்படியே படுத்திருக்கும்.

ஆவிக்குரிய ஜீவியத்தில் இத்தனை **அருமையாய் வளர்ந்துவரும்** ஒருவளை ஊக்கப்படுத்துவதை விட்டுவிட்டு இப்படி அழித்து சாபத்தை உங்கள் மேல் வரப்பண்ணுகிறீர்களா?

**இதற்கா சபை கமிட்டி கூட்டினீர்கள்?** வெட்கக்கேடு இந்த காரியத்துக்கு என்னையும் துணைக்கழைத்தீர்களே! நீங்கள் யாருக்கு விரோதமாய் திட்டம் பண்ணுகிறீர்கள் என்று யோசித்தீர்களா? என்று மனதார திட்டிவிட்டு எழுந்து வந்து விட்டேன்.

பல ஊர்களில் நான் பிரசங்கிக்கபோகும்போது சில சபைகளில் இரட்சிக்கப்பட்ட சிலரை **சபையை விட்டு நீக்கிவிட்டார்கள்** என்றுஅறிவிப்பு வாசிப்பார்கள்.

**ஏன் நீக்கிவிட்டார்கள்** என்று கேட்டால் பல வருடங்களுக்கு முன் இவர்கள் முழுக்கு ஞானஸ்நானம் எடுத்துவிட்டார்கள் என்று யாரோ மொட்டை கடிதம் எழுதியதால் இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று கூறப்படும் போதெல்லாம் மேலே நான் கூறிய நிகழ்ச்சி ஞாபகத்தில் வரும்.

**இரண்டு மனைவிகளை** வைத்து வாழ்க்கை நடத்துகிறவர்கள், **விபச்சாரக்காரர்,** கள்ளு, சாராயம் காண்ட்ராக்ட் எடுத்தவர்கள், **சபை பணத்தையே** கொள்ளை அடித்தவர்கள், **சபையில் போதகரை** அடிப்பவர்கள், **பிஷப்புக்கு** விரோதமாக, **சபை போதகருக்கு** விரோதமாக **கோர்ட்டில்** கேஸ் போட்டு **அவமானப்படுத்தும் நபர்கள்,** இவர்கள் எல்லாரும் சபையில் நிரந்தரமாக பல **பொறுப்புகளின் கவுரவிக்கப்படுகிற வெட்கங்கெட்ட நிலைமை** இன்று திருச்சபையில் பல இடங்களில் காணப்படுகிறது.

கர்த்தர் ஆரம்பித்த ஆதி திருச்சபையில் (மனந்திரும்பினவர்களை) இரட்சிக்கப்ட்டவவர்களை அனுதினமும் கர்த்தர் சபையில் சேர்த்துக் கொண்டார் என்று (அப். 2:4ல்) எழுதியிருக்கிறது. ஆனால் இவர்களோ இரட்சிக்கபட்டவர்களை **வெளியேற்றுகிறார்கள்,** எவ்வளவு வித்தியாசம் பாருங்கள்.

மனந்திரும்பி பரிசுத்த வாழ்க்கைக்கு தன்னை அர்ப்பணிப்பவர்களை ஏதோ சில காரணங்காட்டி சபையை விட்டு நீக்குவதால் நஷ்டம் சபைக்குதான் என்பதை இவர்கள் புரிந்துகொள்ளாமல் இருக்கிறார்ள்.

**இரட்சிக்கப்பட்டவர்களை** சபையைவிட்டு வெளியே தள்ளுபவர்களும், அதற்கு துணைபோகிறவர்களும் சபிக்கப்பட்டவர்களாவார்கள். தேவ கோபம் நிச்சயம் ஒருநாள் இவர்கள்மேல் பற்றி எரியும். இப்படிப்பட்டவர்கள் சபைக்காக பாடுபடுவதாக அல்லது உண்மையாக இருப்பதாக நினைக்கலாம். அல்லவே அல்ல! இவர்கள் கர்த்தருக்கு விரேதமாக கர்த்தரின் வசனத்துக்குவிரோதமாக செயல்புரி கிறார்கள்,

இவர்களை நியாயம் தீர்ப்பது ஒன்றிருக்கிறது, **என் வசனமே இவர்களை கடைசி நாளில் நியாயம் திர்க்கும் என்று இயேசு கூறினார்,** (யோவா 12:48)

இடறல்கள் வராமல் போவது கூடாத காரியம் ஆகிலும் **அவைகள் எவனால் வருகிறதோ அவனுக்கு ஐயயே,** லூ. 17:1

**ONLINE BANKING (NEFT)**

**Name : M G E PUSHPARAJ**

**STATE BANK OF INDIA**

IFSC CODE - IFSC SBIN0001970 -10764116842 **A/C No: 10764116842**

SWIFT CODE - SBININBB300 **A/C No: 10764116842**

**CANARA BANK - SALEM** (SURAMANGALAM BRANCH)

IFSC CODE - IFSC CNRB0001219- 1219101013622. **A/C No: 1219101013622.**

SWIFT CODE - CNRB0001219 -1219101013622. **A/C No: 1219101013622.**



## என் அன்றாட ஜெபமும் ஸ்துதியும்

இப்போதும் என் தேவனே !

**இந்த சந்ததிக்கு** உமது வல்லமையும்

**ரப் போகிற யாவருக்கும்** உமது பராக்கிரமத்தையும்

நான் அறிவிக்குமளவும்

முதிர் வயதும் நரை மயிருமுள்ளவனாகும் வரைக்கும்

என்னை கைவிடீராக .

– ஆமென்

**FEBRUARY 2024**

# Printed Book (Periodical)


**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription :**

| | |
|---|---|
| **India** | **- Rs.60/** |
| **Foreign** | **- Rs.600/** |


**Return Requested:**


**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**



Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.